# யா/ நாரந்தனை றோ.க.மகா வித்தியாலயம்

## பரிசளிப்பு விழா - 2017

### அதிபர் அறிக்கை

# J/ Naranthanai R.C.M Vidyalayam

## PRIZE DAY - 2017

### PRINCIPAL'S REPORT

# பாடசாலைக் கீதம்

சேமமுறக் கல்வி வளம் செழிப் பூட்டும் நாரந்தனை
றோமன் கத்தோலிக்க வித்தியாலயம் வாழியவே
(சேமமுற...)

எம்முற எந்நாளும் எம் தயைப் போற்றிடுவோம்
நாமமது நிலைத்திடவே நாளும் நாளும் ஏத்திடுவோம்

பாமரறும் படித்துயர்ந்து பயன்பெறுக பலன் வெறுவோம்
தேமதுரத் தமிழோசை திக்கெல்லாம் பரப்பிடுவோம்
(சேமமுற...)

கனிவுடனே கற்றுயர்ந்து கன்னியமாய் வாழ்ந்திடுவோம்
புனிதரவர் இராயப்பர் சின்னப்பர் அருள்பெறுவோம்
பணி பெருக்கி பலதுறை பயன்பாடு பெற்றிடுவோம்
தனியாற்றல் அறிவுடமை தனியாது உயர்த்திடுவோம்
(சேமமுற...)

பெருகிவரும் விஞ்ஞானப் பேறுகளும் பெற்றிடுவோம்
அருமைகளும் ஆய்ந்தறிந்து அணிசெய்வோம்
ஒரு மனதாய்க் கடமையதே உயர்வென்று செய்திடுவோம்
கருணை தரு மெய்ஞானம் காப்பாகக் கொண்டிடுவோம்

# J/ Naranthanai R.C.M Vidyalayam

## PRIZE DAY - 2017

**On Tuseday 21st of November of 9.30am**

**Chair person**

Rev. Sr. Mary Nirmala ABEL

**(Our principal)**

**Chief Quest**

Mr. N. Vinthan Kanagaratnam

**(Honourable member of Northen provincial council)**

**Special quest**

Rev. Fr. S. Ananthakumar

**(Parish Priest Naranthanai)**

**Quest of Honour**

Mr.M.Sathiyaseelan

**(DEO Kayts)**

Mr.T.Antony Fernando

**President of Naranthanai people's welfare Association.**

**The principal**

**Teachers & Students**

# நிகழ்ச்சி நிரல்

1. பிரதம விருந்தினரை பான்ட் வாத்திய இசையுடன் அழைத்து வருதல்
2. தேசிய கொடியேற்றலும் தேசிய கீதம் இசைத்தலும்
3. பாடசாலைக் கொடி ஏற்றலும் பாடசாலைக் கீதம் இசைத்தலும்
4. மாகாணக்கொடி ஏற்றல்
5. மங்கள விளக்கேற்றல்
6. இறைவணக்கம்
7. வரவேற்பு நடனம்
8. வரவேற்பு உரை (உபஅதிபர்)
9. அதிபர் அறிக்கை
10. பரிசில் வழங்கல்
11. கலை நிகழ்வு
12. சிறப்பு விருந்தினர் உரையும் ஆசியுரையும் ( அருட்தந்தை ஆனந்தகுமார்)
13. கலை நிகழ்வு
14. கௌரவ விருந்தினர் உரை ( திரு.மு.சத்தியசீலன்)
15. கலை நிகழ்வு
16. கௌரவ விருந்தினர் உரை ( திரு.அன்ரனி பெர்னான்டோ)
17. கலை நிகழ்வு
18. பிரதம விருந்தினர் உரை
19. நன்றியுரை ( திரு. தெ.வசந்தன்)
20. தமிழ்த்தாய் வாழ்த்து

# யா/ நாரந்தனை றோ.க.மகா வித்தியாலயம்

மகுடவாக்கு :- "அறிவே ஆசான்"

நோக்கக்கூற்று :- "மனித மாண்பை மாட்சிப்படுத்தி மாண்புற வாழ வழிசமைப்போம்"

பணிக்கூற்று :- "கல்வியின் வன்மையான கட்டமைப்புக்களை நீக்கி கற்றல் கற்பித்தலுக்கூடாக மாணவர்களிடம் மறைந்து கிடக்கும் பரிபூரணத்துவத்தை வெளிப்படுத்தும் நெகிழ்ச்சியான சந்தர்ப்பங்களை நவீன தொழில்நுட்பத்தினூடாக வளர்த்து மனித மாண்பை மாட்சிப்படுத்தி மாண்புற வாழும் நற்பிரஜைகளை உருவாக்குவோம்"

## 2016ம் ஆண்டிற்கான அதிபர் அறிக்கை

சப்த தீவுகளில் ஒன்றான தீவகப்பகுதியில் பனைவளம், மண்வளம் நிறைந்து செழிப்புற அமைந்துள்ளது. எமது நாரந்தனைக் கிராமம், இதன் மத்தியில் பரம்பரைக் கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் ஆன்மீக வாழ்வூட்டும் ஆலயத்தின் புனிதர்களான இராயப்பர் சின்னப்பரின் பாதம் பணித்து. 144 ஆண்டுகள் கட்டிக்காக்கப்பட்டு நிமிர்ந்து நிற்கும் எமது பாடசாலைக்கு தலைசாய்த்து இவ்வரங்கையும் மண்டபத்தையும் அலங்கரித்துக் கொண்டிருக்கும் பெருந்தகைகளே இந் நிகழ்வின் பிரதம விருந்தினர் அவர்களே, சிறப்பு விருந்தினர்களே விழாவை சிறப்பிக்க வந்திருக்கும் அருட்தந்தையர்களே, அருட்சகோதரிகளே, அதிபர்களே, ஆசிரியர்களே, ஏனைய அரசசார்பற்ற உத்தியோகத்தர்களே, கல்விசாரா ஊழியர்களே, பெற்றோர்களே, நாரந்தனை மக்கள் நல்வாழ்வுச்சங்க உறுப்பினர்களே, நாரந்தனை மக்கள் சங்க உறுப்பினரே, பழைய மாணவர்களே பாடசாலையின் விருத்திக்கு அக்கறையுடன் உழைக்கும் நலன் விரும்பிகளே பாசமிகு

மாணவச் செல்வங்களே, முதலில் அனைவருக்கும் வணக்கத்தைக் கூறிக்கொண்டு அனைவரையும் இருகரம் குவித்து வரவேற்று இவ்வாண்டிற்கான அதிபர் அறிக்கையை சமர்ப்பிப்பதில் பெருமகிழ்வு அடைகின்றேன்.

இன்றைய இப்பரிசில் தினவிழாவில் எம்மைப் பெருமைப்படுத்தி நிகழ்வைச் சிறப்பிக்க முதன்மை விருந்தினராக வருகை தந்திருக்கும் கௌரவ வடமாகாணசபை உறுப்பினர் திரு. விந்தன் கனகரட்ணம் அவர்களே நெடுந்தீவு மண்ணில் உதித்து அங்கு ஆரம்பக் கல்வியை முடித்து உயர்கல்வியை இந்தியாவில் கற்று பின் தாய் நாட்டில் மக்கள் பணியை பொதுப்பணியாக கொண்டு 32 வருடங்கள் அரசியல் பணியில் ஈடுபட்டுள்ளீர்கள். 5 வருடங்கள் பிரதேச சபை உறுப்பினராகவும் இருந்து தொடர்ந்து வடமாகாண சபை உறுப்பினராக இன்று வரை செயற்பட்டு வரும் என் அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய முதன்மை விருந்தினரை எனது தொலைபேசி ஊடாக அழைக்கும்போது அழைப்பிற்கு ஆம் என்று பதில் கொடுத்து எமது விழாவை சிறப்பித்து நிற்கும் பிரதம விருந்தினரை எமது பாடசாலை சமூகம் பெருமகிழ்ச்சியுடன் வரவேற்று மகிழ்ந்து நிற்கின்றது.

தொடர்ந்தும் இன்றைய எமது பரிசளிப்பு தின நிகழ்விற்கு அழைப்பை ஏற்று சிறப்பு விருந்தினராக வருகை தந்திருக்கும் எமது நாரந்தனை பங்கு தந்தை அருட்திரு சிவப்பிரகாசம் ஆனந்தகுமார் எம்மோடு அருகிருந்து எங்கள் பாடசாலையின் ஆன்மீக, கல்விச்செயற்பாடுகளை அக்கறையுடன் கவனித்து வருவதுடன் எமக்கான ஆலோசனையையும், ஆசீரையும் வழங்கி வருவதையிட்டு பெருமையடைகின்றோம். அத்துடன் இந் நன்நாளில் எமது விழாவிற்கு ஆசியுரை வழங்கி சிறப்பிக்க வந்திருக்கும் தங்களை இன்முகத்தோடு வரவேற்கின்றோம்.

என் அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய ஊர்காவற்றுரை கோட்டக் கல்விப்பணிப்பாளர் திரு.மு. சத்தியசீலன் அவர்கள் இன்றைய எமது பெருவிழாவில் கௌரவ விருந்தினராக கலந்து சிறப்பிப்பது எமக்கு மகிழ்வையும், ஊக்கத்தையும் தருகின்றது. ஊர்காவற்றுறை கல்விக்கோட்ட ப்பாடசாலைகளின் வளர்ச்சிக்காக தனது வழிகாட்டினால் சிறப்பாக மேற்கொண்டு வருகின்றார். எமது பாடசாலையின் செயற்பாடுகள் அனைத்திலும் அக்கறையுடன் இருப்பதையிட்டு மகிழ்வடைவதுடன் அதிகாரியை பெருமகிழ்வுடன் வரவேற்று மகிழ்வடைகின்றோம்.

மேலும் கௌரவ விருந்தினராக வருகைதந்து சிறப்பிக்கும் எமது பாடசாலையின் பழைய மாணவர்களும் நாரந்தனை மக்கள் நல்வாழ்வு சங்க தலைவருமான திரு. பாஸ்கரன் அவர்களையும் எமது பாடசாலைக்கு நாரந்தனை மக்கள் நல்வாழ்வுச்சங்க இத்தாலி, பிரான்ஸ் உறுப்பினர்களிடமிருந்த உதவிகளைப் பெற்றுத் தந்து எமது பாடசாலையின் வளர்ச்சிக்காக உழைக்கும் கௌரவ விரந்தினரை இன்முகத்துடன் வரவேற்பதில் மகிழ்வடைகின்றேன்.

## மாணவர் விபரம்

2016ம் ஆண்டில் இவ்வித்தியாலயத்தில் ஆரம்பப்பிரிவில் 65 மாணவ மாணவிகளும் இடைநிலைப்பிரிவில் 105 மாணவர்களும் உள்ளடங்கலாக 170 மாணவ மாணவிகளைக் கொண்ட கலவன் பாடசாலையாக இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. நீண்டகால போரின் பின்னர் இப்பிரதேச மக்கள் கல்வி கற்கும் பாடசாலையாக உள்ளபோதும் இடம்பெயர்ந்த சிலர் மீள்குடியேற்றத்தில் ஈடுபட்டமையும், க.பொ.த சாதாரண வகுப்பு மட்டும் உள்ளதால் எமது பாடசாலை மாணவர் தொகை 170 இற்கு உட்பட்டதாகவே உள்ளது.

## ஆசிரிய ஆளணி:-

2016 ம் ஆண்டில் எமது வித்தியாலயத்தில் 12 நிரந்தர ஆசிரியர்களும் 02 பகுதிநேர ஆசிரியர்களும் 01 முழு நேர விடுவிக்கப்பட்ட ஆசிரியரும் 1 தொண்டராசியரும் என மொத்தமாக 16 ஆசிரியர்கள் சேவையாற்றி வந்தனர்.

இவற்றுடன் 2016 புதிதாக எம்முடன் இணைந்த திரு செல்வராசா முகுந்தன், செல்வி சிவசுப்பிரமணியம் நிஷாந்தினி இவர்களை எமது பாடசாலை சமூகம் வரவேற்பதுடன் இவர்களது பணிசிறக்க வாழ்த்துகிறோம். எமது பாடசாலையில் கடந்தகாலங்களில் அரும்பணியாற்றி மாற்றலாகிச் சென்ற செல்வி அருளப்பு ரூபினி, செல்வி தர்சினி விக்னராசா, திருமதி.லதா ஜெகதீஸ்வரன், திருமதி சந்திரகுமார் கிருபாயினி, திரு.S.சிவசுதன், சிற்றூழியர் திரு. யூட் நிக்சன் அவர்கள் அனைவரையும் நன்றியுடன் நினைத்து அவர்களின் பணிசிறக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். தொடர்ந்து இவர்கள் சேவை சிறக்க வாழ்த்துகின்றோம்.

## 2016 ஆசிரிய ஆளணி விபரம்

| | |
|---|---|
| 1.அருட்சகோதரி.மேரிநிர்மலா ஆர்பெல் | அதிபர் |
| 2.திருமதி.சே.கி.அன்ரனிபெர்னான்டோ | பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி ஆசிரியர் |
| 3.திருமதி.ல.ஜெகதீஸ்வரன் | பட்டப்பின் கல்வி டிப்ளோமா |
| 4.திருமதி.கி.சந்திரகுமார் | பட்டப்பின் கல்வி டிப்ளோமா |
| 5.திருமதி.சி.பாலகிருஷ்ணன் | நுண்கலைப்பட்டதாரி (சங்கீதம்) |
| 6.செல்வி.சி.சியாமிளா | பட்டப்பின் கல்வி டிப்ளோமா |
| 7.செல்வி.ஹ.பரமநாதன் | பயிற்றப்பட்ட ஆசிரியர்(ஆங்கிலம்) |
| 8.செல்வி.கு.கனகரத்தினம் | பட்டதாரி (கலை) |
| 9.திருமதி.டி.எல்மோ வலைரைன் சுயேந்திரன் | பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி |
| 10.திருமதி.ப.கேசவன் | பட்டப்பின் கல்வி டிப்ளோமா |
| 11.திருமதி.வி.தேவமுகுந்தன் | பட்டதாரி |
| 12.திருமதி.ம.பாஸ்கரன் | பட்டப்பின் கல்வி டிப்ளோமா |
| 13.திரு.செ.முகுந்தன் | பயிற்றப்பட்ட ஆசிரியர் (கணிதம்) |
| 14.திருமதி.ய.பிரசாந் | கற்பித்தலில் தேசிய டிப்ளோமா (சமூக விஞ்ஞானம்) |
| 15.செல்வி.டி.சிவசுப்பிரமணியம் | கற்பித்தலில் தேசிய டிப்ளோமா (விசேட கல்வி) |
| 16.திரு.தெ.வசந்தன் | கற்பித்தலில் தேசிய டிப்ளோமா (நாடகமும் அரங்கியலும்) |
| 17.திருமதி.ஜெயந்தன் தினுஜா | பட்டதாரி |
| 18.திரு.இ.வசீகரன் | கற்பித்தலில் தேசிய டிப்ளோமா (பகுதிநேர ஆசிரியர்) |
| 19.திரு.சீ.ஜங்கரன் | பயிற்றப்பட்ட ஆசிரியர் (பகுதிநேர ஆசிரியர்) |

## கல்விசாரா ஊழியர்கள்:-

2016ம் ஆண்டில் எமது பாடசாலைக்கு சிற்றூழியர் இருக்கவில்லை.

## கல்வி அபிவிருத்தி:-

எமது பாடசாலையில் முன்னெடுக்கப்படும் ஆசிரிய, மாணவ, உயர்மட்ட செயற்றிட்டங்கள், காலை, மாலை, மேலதிக வகுப்புக்கள் நடாத்தப்பட்ட போதும் பிள்ளைகளின் வரவு மிகவும் குறைவாகவே காணப்பட்டது. இதனால் எமது அதிகாரிகளின், ஆலோசனைகள் ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான சேவைகள் வெற்றியளிக்க முடியாமை வருத்தத்திற்குரிய விடயமாகும். 2016ல் தரம் 5 புலமைப்பரிசின் பரீட்சைப்பெறுபேறுகள் ஓரளவு முன்னேற்றம் உள்ளதாகக் காணப்பட்டது. 2 மாணவர்கள் 100மேல் புள்ளிகளையும் 10 மாணவர்கள் 70 மேல் புள்ளிகளையும் பெற்று 59% சித்தியைப்பெற்றுள்ளனர்.

2016ல் இடம்பெற்ற கா.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் செல்வி மதுமிதா 3A,3C,2S சித்தி பெற்று எமது பாடசாலைக்கு பெருமை சேர்த்துத் தந்துள்ளார்.

# மன்றங்கள்

## கத்தோலிக்க மாணவர்மன்றம்

உடல், உள ஆன்மீக ரீதியாக மாணவர்களை வழிப்படுத்தும் நோக்கோடு இம் மன்றம் செயற்பட்டு வருகின்றது. நல் ஒழுக்க விழுமியங்களைக் கட்டியெழுப்பி மனிதநேயம் பேணும் செயற்பாடுகளை மன்றம் செய்து வருகின்றது. தவக்காலத்தில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமை களிலும் சிலுவைப்பாதைத்தியானம் நடைபெறுகின்றது. தவக்காலத் தியானமும், ஒப்புரவு அருட்சாதனம் வழங்குவத ற்கான ஒழுங்கும் செய்யப்படுகின்றது. மாதத்தின் முதல் வெள்ளிக் கிழமைகளில் திருப்பலியும் மாணவருக்கான மறையுரையும் இடம்பெறுகின்றது. ஆயர்தின நிகழ்வில் மாணவர்கள் பங்குபற்ற வசதி செய்யப்படுகின்றது. வருடந்தோறும் ஒளிவிழா நிகழ்வுகள் இடம்பெறுகின்றன. இதனை முன்னிட்டு வெளிச்சக்கூடு, கிறிஸ்மஸ் குடில், கிறிஸ்மஸ் வாழ்த்துமடல் தயாரிக்கும் போட்டிகளும் மனைப்போட்டி, வினாவிடைப்போட்டிகளும் நடைபெறுகின்றன.

யாழ் மறை மாவட்ட மறைக்கல்வித்தேர்வு, திருவிவிலிய வினா விடைப் போட்டிகளிலும் மாணவர்கள் பங்குபற்றுகின்றனர். மாணவர்களின் அறிவு, திறன், மனப்பாங்கு, விருத்தியினை ஏற்படுத்தும் நோக்கோடு கத்தோலிக்க மாணவர்மன்றம் இயங்கி வருகின்றது.

## தமிழ் இலக்கிய மன்றம்

மாணவர்களிற்கிடையே மொழி ஆற்றலை மேம்படுத்தும் பொருட்டு எமது பாடசாலையில் தமிழ் மன்றமானது செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இம் மன்றத்தின் மூலம் மாணவர்கள் கவிதை, பேச்சு, நாடகம் என்பவற்றின் மூலம் தமது ஆற்றல்களை வெளிப்படுத்தி வருகின்றனர். அத்துடன் வருடாந்த தமிழ்த்தினப் போட்டி, சுற்றுநிருபத்திற்கமைய பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி, கவிதைப்போட்டி, சிறுகதைப்போட்டி, ஆகியன பாடசாலை மட்டத்தில் நடாத்தப்பட்டு தெரிவு செய்யப்படும் மாணவர்கள் கோட்டமட்டத்தில் பங்குபற்றியமையும் குறிப்பிடத்தக்கது.

## கணித விஞ்ஞான மன்றம்

மாணவர்களிடையே கணித விஞ்ஞான அறிவை மேம்படுத்தும் முகமாகவும் கணித விஞ்ஞான கற்கையை விரும்பும் நோக்குடனும் கணித விஞ்ஞான மன்றச் செயற்பாடுகளை அரங்கச் செயற்பாடாகவும் முன்னெடுத்தோம். அதில் மாணவர் தாளலயம், கவிதை, பாட்டு, கணிதப்புதிர், கோட்டமட்ட விஞ்ஞானக் கண்காட்சி என்பன குறிப்பிடத்தக்கன.

## சுற்றாடல் முன்னோடிக் குழு

மத்திய சுற்றாடல் அமைச்சின் கீழ் செயற்பட்டு வரும் எமது சுற்றாடல் முன்னோடிக்கழுவானது பச்சைப்பதக்கத்தை பெறுவதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இச் சுற்றாடல் முன்னோடிக்குழு மூலம் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கான செயற்பாடுகள் நடைமுறைப்படு த்தப்படுகின்றன. அத்துடன் சுற்றாடல் தினம் இக்குழுவினால் பாடசாலையில் கொண்டாடப்பட்டது. வலய மட்ட சுற்றாடல் தினத்தில் செல்வி அபிநயா அவர்களின் கவிதை பாராட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## அழகியல் மன்றம்

இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழ்களும் பாடசாலைகளில் மாணவர்களின் உடல், உள செயற்பாடுகளுக்கு இன்றியமையாததாகும். அந்த வகையில் அழகியல் மன்றம் இயங்கி வருகின்றது. சங்கீத மாணவர்கள் பாடசாலை நிகழ்வுடன் மட்டுமல்லாது ஏனைய நிகழ்வுகளிலும் பங்குபற்றுகின்றனர். அதே போன்று நடன மாணவர்களும் பல கலாச்சார நிகழ்வுகளில் தமது ஆற்றகைகளை திறம்பட வெளிப்டுத்துகின்றனர். சித்திர பாட மாணவர்கள் பாடசாலை சித்திரப் போட்டிகளில் மட்டுமன்றி ஏனைய நிறுவனங்கள் நடாத்துகின்ற போட்டிகளிலும் பங்கு பற்றி எமது பாடசாலைக்கு அழகியல் ஊடாக வெற்றிகளை ஈட்டித்தந்துள்ளார்கள். அவர்களுக்கு மனமார்ந்த நன்றிகள்ளையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

## ஆரம்பக் கல்வி மன்றம்

மாணவர்களின் தலைமைத்துவத்திறனை வளர்த்து எதிர்காலத்தில் சிறந்த ஆளுமை மிக்கவர்களாகவும் சுய ஆக்கத்தினை வெளிக் கொணர்வதற்கு ஆரம்பக்கல்வியே அத்திவாரமிடுகின்றது. அந்த வகையில் ஆரம்பக் கல்வி மன்றமானது மிகவும் இன்றியமையாததாக அமைகின்றது. மேலும் ஒவ்வொரு மாணவர்களும் சபை முன்பே தமது படைப்புக்களை கூச்சமின்றியும், தயக்கமின்றியும் வெளிக்கொணர்ந்து பொருத்தமான உறவுகளையும் தொடர் பாடல் திறன்களையும் பேச்சுத்திறன்களையும் ஒற்றுமை உணர்வினையும் வளர்த்துக் கொள்வதற்கு இம் மன்றமானது வழியமைத்துக்கொள்கின்றது.

## விசேட கல்வி அலகு

எமது பாடசாலையில் விசேட கல்வித் தேவையுடைய மாணவர்களுக்கான கல்விச்செயற்பாடுகளுக்கான விசேட கல்வி அலகு இயங்கி வருகின்றது. இவ் அலகில் ஐந்து மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். மெதுவான உளவளர்ச்சி, கேட்டற்குறைபாடு, டவுண்ஸ், ஓட்டிஸம் போன்ற நிலைக்கு உட்பட்ட வெவ்வேறு வயதினைச் சார்ந்த மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். இவர்களது வாழ்க்கைத் தேர்ச்சிகளை விருத்தி செய்யும் வகையில் இவர்களுக்கான கல்வி வழங்கப்பட்டு வருகின்றது.

மேலும் இவர்களுக்கென அடிப்படை வசதிகள் கொண்ட விசேட அலகு இல்லாத போதும் சிறிய பகுதி ஒன்றிலேயே இவர்களுக்கான

செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் விசேட தேவையுடையோர்க்கான விளையாட்டுப்போட்டிகள், சித்திரப்போட்டி, ஆக்கப்போட்டி என்பவற்றில் பங்கு பற்றி எமது மாணவர்கள் மாகாண ரீதியிலும் பரிசில்களைத் தட்டிச் சென்றமை குறிப்பிடத்தக்கது.

## மாணவ பாராளுமன்றம்

மாணவர்களுக்கான சனநாயக அடிப்படைப் பண்புகளை மேன்மைப் படுத்தும் நோக்கில் இலங்கையில் செயற்பட்டுவரும் மாணவர் பாராளுமன்றம் 2016ம் ஆண்டு ஏப்ரல் மாதம் தேர்தல் நடாத்தப்பட்டு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டு 2016ம் ஆண்டு மே மாதம் முதலாவது மாணவர் பாராளுமன்ற முதலாவது அமர்வு நடைபெற்றது. இப் பாராளுமன்ற அமைப்பில் சபாநாயகர், பிரதமர், சபைமுதல்வர், பிரதிச்சபாநாயகர், பிரதிச் செயற்குழுத்தலைவர், அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், ஆலோசனைச் செயற்குழுக்கள், போன்றோர் உள்ளடங்குவர். முதலாவது அமர்வில் அமைச்சர்கள் பதவியேற்று தமது பிரேரணைகளை முன்வைத்தனர். பின்னர் 2106ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் இரண்டாவது அமர்வும் இடம்பெற்றது.

இப் பாராளுமன்ற செயற்பாடுகளை சிறப்பாக வழிநடாத்திச் சென்ற பொறுப்பாசிரியர் திருமதி. லதா.ஜெகதீஸ்வரன் அவர்களுக்கும், அவருக்கு ஆலோசனை வழங்கும் ஆசிரியர்களுக்கும், செயற்பாடுகளில் ஈடுபடும் மாணவர்களுக்கும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்வதோடு மேலும் இப் பாராளுமன்ற செயற்பாடு வளர்ச்சியடைய வாழ்த்துகின்றேன்.

## சமூக விஞ்ஞான மன்றம்

சமூக விஞ்ஞான மன்றமானது மாணவர்களின் சமூக மேம் பாட்டிற்கான திறன்களை வளர்க்கும் வகையில் செயற்பட்டு வருகின்றது. கற்றல் நடவடிக்கைகளுக்கு அப்பால் மாணவர்களுடைய சமூகம் சார் பொது அறிவுத்தகவல்களையும் வழங்குகின்றது. அத்தோடு சர்வதேச தினங்களான சூழல்தினம், புவிதினம், மகளிர்தினம் போன்றவற்றை நடாத்தி வருகின்றது. இம் மன்றமானது மாதம் ஒருமுறை கூடிச்செயற்படுவதுடன் மாணவர்களை சமூக விஞ்ஞானப்போட்டிக்கு தயார்படுத்தி கோட்டமட்ட, வலயமட்ட, மாகாணமட்ட போட்டிவரை செல்லும் மாணவர்களுக்கு பயிற்சிகளும் பரிசில்களும் வழங்கப்படுகின்றன.

## நூல்நிலையம்:

மாணவர்களின் அறிவுப்பசிக்கு அவசியமானது நூல்நிலையமாகும். எமது பாடசாலையில் பௌதீகவளப் பற்றாக்குறையினால் ஓர் வகுப்பறையை நூல்நிலையமாகப் பயன்படுத்துகின்றோம். இங்க பல வசதிக்குறைவுகள் காணப்படுகின்றன.மாணவரின் அறிவு வளர்ச்சியை கருத்திற்கொண்டு மாணவர்களின் நூலக தேவையை ஓரளவு பூர்த்தி செய்ய முயற்சிப்பதுடன் வாசிப்பு ஆற்றலை மேம்படுத்தும் பொருட்டு மாணவர்களின் பிறந்தநாளிற்கு புத்தகம் அன்பளிப்பு செய்வதும், காலைக்கூட்டத்தில் தினசரி பத்திரிகை வாசிப்பதும், வாசிப்பு மாதத்தில் போட்டிகள் மேற்கொண்டு பரிசில்கள் வழங்கி கௌரவிப்பது எமது செயற்பாடாக அமைகின்றது.

## கணினி நிலையம்:-

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் அதிவேக வளர்ச்சி காரணமாக மாணவர்களின் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளில் கணினி பயன்படுத்த வேண்டிய தேவை உள்ளது. தரம் 1-11 வரை கணினிப் பயன்பாடு அவசியமாக உள்ளது. எமது கணனிகள் பல பழுதுபட்ட நிலையில் செயலிழந்து உள்ளன. அத்துடன் பல கணனிகள் தேவையாக உள்ளன. வசதியான கணனி அறையும் இல்லாது இருப்பதும் மாணவர்களின் செயற்பாட்டுக்குத் தடையாக உள்ளது.

## பாடசாலை அபிவிருத்திக் குழு:-

பெற்றோர் பிரதிநிதிகளை உள்ளடக்கிய பாடசாலை அபிவிருத்திச் சங்கம் நல்லமுறையில் இயங்கி வருகிறது. எமது பாடசாலை வளர்ச்சிக்கு இன்னும் கூடுதலான செயற்பாடுகள் தேவை என்பது குறிப்பிடத்தக்கது. எமது பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளராக திருமதி டிஸ்சன் பிறின்சி அவர்களும் பொருளாளராக ஆசிரியர் திருமதி கேசவன் பரிமளா அவர்களும் சிறப்பாக செயற்படுகின்றார்கள் இவர்களுக்கு எனது மனம் நிறைந்த நன்றிகள்.

## பான்ட் வாத்தியக்குழு:-

எமது பாடசாலையில் பான்ட் வாத்திய உபகரணங்கள் இருந்தும் அதனை நெறிப்படுத்துவதற்கான பொருத்தமான ஆசிரியர் காணப் படாமையினால்அவ் இசைக்கருவிகள் நலிவுற்றுக் காணப்படுகிறது. இதற்கான ஆடைகளும் எம்மிடம் இல்லாத நிலை காணப்படுவது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

## விளையாட்டுக்குழு:-

வருடந்தோறும் இல்ல மெய்வல்லுனர் போட்டி சிறப்பாக நடைபெற்று வருகிறது. எமது பாடசாலைக்கு சொந்தமாக மைதானம் இல்லாத போதும், பாடசாலைக்கு முன்பாக உள்ள மைதானத்தில் போட்டிகளை நடாத்தி வருகின்றோம். பெருவிளையாட்டான உதைபந்தாட்டத்தில் எமது மாணவர்கள் வெகுசிறப்பாகச் செயற்பட்டு கோட்ட வலய மட்டத்தில் முதல் நிலைபெற்று, மாகாணம் சென்றமை மகிழ்வுக்குரிய விடயமாகும். அத்துடன் பல மாணவர்கள் சுவட்டு நிகழ்ச்சிகளிலும், கோட்டம், வலயம், சென்று பரிசில்களும் பெற்றுத்தந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

## மதிய உணவு:-

எமது பாடசாலை மாணவர்களின் உடல், உள விருத்திக்கு ஆரோக்கியமும், போசணையும் இன்றியமையாது. எனவே உலக உணவுத் திட்டத்தின் கீழ் தரம் 1-9 வரையான மாணவர்களுக்கு உணவு வழங்கும் திட்டம் தொடர்ந்து சிறப்பாக நடந்துவருகிறது. திரு. ஜோய் மனுவேல்பிள்ளை அவர்களின் தலைமைத்துவத்தில் இயங்கி வரும் ஒருபானைத்திட்ட நிதிமூலமும் மதிய உணவைப் பிள்ளைகளுக்கு சுவையாக வழங்க முடிகின்றது. இதற்கு பங்களிக்கும் இவர்களை நாம் மறக்க முடியாது நன்றி கூறுகின்றோம். அத்துடன் இத்திட்ட செயற்பாட்டை முன்நின்று சரிவரச் செய்கின்ற ஆசிரியர் செல்வி.க.குகப்பிரியா அவர்களுக்கு எனது நன்றிகள். அத்துடன் பல ஆண்டுகளாக எமது மாணவர்களுக்கு இதை சமைத்துத்தரும் திருமதி. டெஸ்மன் ஜெயநாயகி, திருமதி லுசில்டா வாசுகி யேசுநாதன் அவர்களுக்கும் எனது நன்றிகள். இறைபதமடைந்த வாசுகி அவர்களின் ஆன்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றேன்.

## பழைய மாணவர் சங்கம்:-

ஒரு பாடசாலையை உயிர்துடிப்பாக்குவது பழைய மாணவர் சங்கமே. எமது பாடசாலையில் இவர்களின் ஒத்துழைப்பு மிகக்குறைவாகவே உள்ளது. இருந்தும் புலம்பெயர்ந்த நாரந்தனை மக்கள் நல்வாழ்வுச் சங்கம், பிரான்ஸ், இத்தாலி வாழ் பழைய மாணவர்கள் பலர் உதவி புரிவது மகிழ்வுக்குரிய விடயமாகும்.

## எமது தேவைகள்:-

பலவகை பற்றாக்குறைகள் எம்மிடையே காணப்பட்டபோதும் எமது பௌதீக வளங்கள் மற்றும் ஆசிரியர் ஆளணியினைக்கொண்டு முடியுமான

வரை செயலாற்றி வருகின்றோம். எமது பாடசாலையில் பலவிதமான நெறிபிறழ்வுக்கு உட்பட்ட பிள்ளைகளை சரியாக வழிப்படுத்தி உருவாக்க வேண்டிய தேவையினைக் கண்டுணர்ந்து செயலாற்றுகின்றோம். எமது 45 மாணவர்களுக்கு தந்தை வேறுதிருமணம், தந்தை இல்லை. தாய், பேர்த்தியாருடன் வாழுதல் ஆகியவைகளை காணலாம். இது இம்மாணவர்களின் நெறிபிறழ்வுக்கு முக்கிய காரணம் என்பது அசைக்க முடியாத உண்மையாகும்.

ஆனாலும் இம்மாணவர்களுக்கு பொருத்தமான எதிர்காலத்தை உருவாக்கிக் கொடுக்க எமது ஆசிரியர்கள் அயராது உழைப்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

எமது நாட்டைப் பொறுத்தவரை வேலை உலகிற்கு மாணவர்களைத் தயார் செய்யும் வகையில் பாடங்கள் தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டு கலைத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதற்கு இணங்க கற்றல், கற்பித்தல் செயற்பாட்டை முன்னெடுக்க கணித, விஞ்ஞான ஆய்வுகூடம் பல வசதிகள் அற்ற நிலையில் காணப்படுகின்றது. நடனம், சித்திரம், சங்கீதம் ஆகிய பாடங்களுக்கு ஒழுங்கான வகுப்பறை இல்லை, பாடசாலைக்கென விளையாட்டு மைதானம் இல்லை, ஒழுங்கான நூலகம் இல்லை, ஆசிரியர்கள் ஓய்வறை இல்லை இதனால் ஆசிரியர்கள் பல சிரமங்களுக்கு உட்படுத்தப்படுகின்றனர். பாண்ட் வாத்தியங்கள் இருந்தும் மாணவர்களுக்கு அதற்கான உடை இல்லை, கற்றல் உபகரணங்களை வைப்பதற்கு அலுமாரிகள் இல்லை, பெரும் விழாக்கள் நடக்கும்போது நாற்காலி (கதிரைகள்) பற்றாக்குறையாக உள்ளது.

அன்பான பெற்றோர்களே, பழைய மாணவர்களே, நாரந்தனை மக்கள் நல்வாழ்வுச்சங்க உறுப்பினர்களே, கிராமத்திலுள்ள பெரியோரே இச் சந்தர்ப்பத்தில் இவற்றை உங்கள் முன் வைக்கின்றேன்.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வருகை தந்த சிறப்பித்துக் கொண்டிருக்கும் அன்புக்கும் மதிப்புக்குமுரிய வடமாகாண சபை உறுப்பினர் திருவாளர் விந்தன் கனகரட்டினம் அவர்களே எமது இத்தேவைகளுக்கு தங்களாலான முயற்சிகள் எடுப்பீர்கள் என நம்புகின்றேன். இத் தேவைகளை சீர்படுத்த முயற்சி செய்வீர்கள் என மிக வினயமாகக் கேட்கின்றேன்.

## நன்றிகள்

எமது வித்தியாலயத்தின் கற்றல், ஒழுக்கநிலை கண்டு சகல வழிகளிலும் ஆக்கமும் ஊக்கமும் தந்து வழிநடாத்தும் வலயக்கல்விப் பணிப்பாளர் திரு.எஸ்.சுந்தரசிவம் அவர்கட்கும் அவருடன் இணைந்து பல வழிகளிலும் உதவியும் ஆலோசனையும் வழங்கி வருகின்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் ஆசிரிய ஆலோசகர்கள் கோட்டக்கல்விப் பணிப்பாளர் ஆகிய அனைவருக்கும் இத்தருணத்தில் நன்றி கூறிநிற்கின்றேன்.

பாடசாலை வளர்ச்சிக்கு எப்போதும் பக்கபலமாக நின்று ஆக்கமும், ஊக்கமும் அளித்து ஆன்மீகம், ஒழுக்கம் கல்வி வளர்ச்சியில் தம்மை அர்ப்பணித்து உழைத்த பங்குத்தந்தை பீற்றர் அடிகளாருக்கும், அருட்பணி ஆனந்தகுமார் அடிகளாருக்கும் எனது உளம் கனிந்த நன்றிகள்.

பிரான்ஸ், இத்தாலி வாழும் புலம்பெயர்ந்த நாரந்தனை மக்கள் நல்வாழ்வுச் சங்க தலைவர், செயலாளர், பொருளாளர் அவருடன் இணைந்து செயற்படும் அனைவருக்கும் எமது நன்றிகள் 1,20,000/= ரூபாவிற்கு எமது பாடசாலைக்கு நிழல்பிரதி இயந்திரம் வாங்குபதற்கு அன்பளிப்புச் செய்தவர்கட்கும் ஆசிரியர் தின நிகழ்விற்காக 15,000/= அன்பளிப்பாகத் தந்து உதவியவர்கட்கும் எமது நன்றிகள்.

எமது இக்கிராமத்தில் உள்ள நகரந்தனை மக்கள் நல்வாழ்வுச்சங்க உறுப்பினர்களுக்கு எனது மனம் நிறைந்த நன்றிகள்.

எமது மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காகத் இரு மாணவிகளுக்கு உதவிபுரியும் டென்மார்க்கில் வாழும் சிவயோக ஜெலம் சுதாகரன் அவர்கட்கும் எனது இதயம் கனிந்த நன்றிகள்

லண்டனில் வாழும் றோய் மனுவேல் பிள்ளை என்பவரின் குழுவினரால் 10 மாணவர்களுக்கு One Child Foundation என்ற நிதி உதவி கிடைக்கப்பெற்றது. அவர்கட்கும் எமது இதய நிறை நன்றிகள்.

கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தின் உதவியினால் தரம் 5 மாணவர்களின் வகுப்பறை வர்ணம் பூசப்பட்டு கவின்கலை உள்ளதாக அமைக்கப்பட்டு அவர்களுக்கான அலுமாரி உட்பட உபகரணங்கள் கற்றல் உபகரணங்கள் கையேடுகள் வழங்கப்பட்டது. சுத்தமாகவும் சுகமாகவும் வாழ

மாதாந்தம் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டு தொடராக நடைமுறைப் படுத்தப்படுகின்றன. இதனை எமக்கு உவந்தளிக்கும் கியூடெக் இயக்குனர் அருட்பணி யூயின் அடிகளாருக்கும் அவரது குழுவினருக்கும் என் மனம்நிறைந்த நன்றிகள்.

திருப்பாலத்துவ சபை நிதியிலிருந்து எமது மாகாணத் தலைவி ஐவருக்கு உதவி செய்கின்றார்கள் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

நாரந்தனை மக்கள் நல்வாழ்வுச்சங்க உதவியுடன் மாலை நேர கணித, விஞ்ஞான வகுப்புக்கள் நடாத்தப்பட்டது மாணவர்கள், பெற்றோரின் ஒத்துழைப்பு குறைவடைந்து மாணவரின் வரவு இன்மையால் அது பலனளிக்காது இடைநிறுத்தப்பட்டது ஆனாலும் இவ் உதவியைச் செய்த புலம்பெயர் நாரந்தனை மக்கள் நல்வாழ்வுச்சங்க உறுப்பினர்களுக்கு எனது இதய ஆழத்திலிருந்து நன்றிகள்.

இறுதியாக இவ்விழாவைச் சிறப்பிக்க எம் அழைப்பை ஏற்று பிரதம விருந்தினர்களாக வருகைதந்த வடமாகாண சபை உறுப்பினர் திரு விந்தன் அவர்கட்கும் சிறப்புவிருந்தினராக வந்து சிறப்பித்து நிற்கும் எமது நாரந்தனை பங்குத்தந்தை அனந்தகுமார் அடிகளார் அவர்கட்கும் கௌரவ விருந்தினராக கலந்து சிறப்பித்து நிற்கும் ஊர்காவற்றுறை கோட்டக்கல்விப் பணிப்பாளருக்கும் நாரந்தனை மக்கள் நல்வாழ்வுச்சங்கத் தலைவர் திரு.பாஸ்கரன் அவர்கட்கும் இருகரம் குவித்து நன்றி கூறி நிற்கின்றேன்.

இவ்விழா சிறக்க எமது அழைப்பினை ஏற்று வருகை தந்திருக்கும் அனைவருக்கும் நன்றிகள் எப்போதும் எமக்கு ஒத்துழைப்புத்தரும் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் எனது வேலைப்பழுவைப் பகிர்ந்து நல்மனதுடன் தோள்கொடுத்த எனது அன்பான ஆசிரியர்கள் பல வழிகளிலும் உதவிபுரிந்த பழைய மாணவர்கள் நலன்விரும்பிகள் அனைவருக்கும் எனது சிறப்பான நன்றிகளையும், பாராட்டுக்களையும் தெரிவிப்பதுடன் இவ்வளவு நேரமும் பொறுமையுடன் எனது அறிக்கையினை செவிமடுத்த உங்கள் அனைவருக்கும் நன்றி கூறி இவ் அறிக்கையினை நிறைவு செய்கின்றேன்.

**நன்றி**

அதிபர்

Rev.Sr.மேரிநிர்மலா ஆபேல்.

# 2016ம் ஆண்டில் பரிசு பெறும் மாணவர் விபரம்

## தரம் – 01

1. க.சாதனா
2. அ.அக்ஷா
3. ஜெ.செபானியா

## தரம் – 02

1. லூ.டொறேக்ஷன்
2. இ.மதுஷாளினி
3. கி.டினுசியா
4. வி.பிரிந்தா
5. ஜோ.நிதன்

## தரம் – 03

1. ஜெ.ஜெனிஸ்ரலா
2. டி.நித்தியா
3. ஜெ.ஜெனிஷா
4. கு.அலெக்ஸ்

## தரம் – 04

1. ம.டனுசன்
2. க.டிசானி
3. ர.அபிஷா
4. நி.றிஸ்ஷானா
5. அ.டிலக்ஷி
6. ஜெ.ஜெறினா

## தரம் – 05

1. டெ.தர்சனா
2. ப.கிஷானா
3. பு.மேரிலக்சனா
4. வி.வினுஜா
5. மொ.வினுஜா
6. தே.றதீசனா
7. சு.சுஜிந்தன்
8. தி.திஷான்
9. றீ.ஜெனோஜன்

யோ.டிலோஜினி

## தரம் – 06

1. யோன்மேரி டினோசன்
2. எமிலியானஸ் சலோமி
3. டிக்சன் மொவோனா
4. ஜெயக்குமார் டெனிற்றா
5. யூட்சின் உதயகுமார் கிறிஸ்ரிகா
6. ஸ்ரான்லி ஜெரினா
7. இந்திரன் காவியா
8. செல்வக்குமார் செந்தூரன்
9. யசோக்குமார் யனிஸ்ரன்
10. ஜெயக்காந்தன் ஜெதுஷா
11. விமலதாஸ் விதுஷா

## தரம் – 07

1. ரவிக்குமார் அபிநயா
2. இராசகுமார் மயூரன்
3. யோக்சின் பெனான்டோ யதுஷா
4. லெனின்குமார் விந்துஜன்

5. மங்களேஸ்வரன் விதுஜன்
6. டெனல்சிலாஸ் ஜெஸ்ரின்
7. நோபேட் பமில்டன்
8. அமலதாஸ் அனுதாஸ்
9. அருள்ராஜ் டிலக்ஷியா

## தரம் 08

1. அன்ரன் றெமோஜா
2. குணசீலன் சஜீவினி
3. ஜெனியஸ் ஜெனா
4. ரங்கநாதன் ஸ்ரீஅனிதா
5. டெயஸ்மன் சுஜீவன்
6. ஜெராட் ஜெனார்த்தனன்
7. றொபேட் றெஜி
8. அன்ரன் டிலக்ஷனா
9. உதயசிங்கராசா சுலக்ஷனா

## தரம் – 09

1. தவசீலராசா விவேஸ்ரிகா
2. ராஜ்பலீன் வெனிற்றா
3. ஜெகதீஸ்வரன் ஜெனிபா
4. சாள்ஸ் சஜீபன்
5. டிறோன் நிறஞ்சன் நிஷான்

## தரம் – 10

1. அலிஸ்ரன் மாட்டின் ஜெஸ்தனி
2. வசந்தகுமார் டிலக்ஷன்
3. ரவீந்திரன் ரதீப்
4. மனோகரன் ஜனார்த்தனன்

5. நிராகரன் நிசாந்தன்
6. றொபேட் டெஸ்மன் எனோஜன்
7. சேவியற்றதீஸ் சுகிர்தா
8. யஜேந்திரன் ஜெயந்தினி
9. தேவராசா பவுஸ்தீனா
10. மகேந்திரன் அபிநயா

**தரம் – 11**

1. மனோகரன் அபின்ஷா
2. குணதாஸ் மதுமிதா
3. தோமஸ்ஞானதீபன் தனுஷா
4. றுபேஸ்குமார் யதுஷன்
5. சந்திரன் பிரசாந்
6. பத்மசீலன் யூட்டிலக்சன்
7. மங்களேஸ்வரன் மதுஷன்
8. யாகப்பூ நிதர்சன்
9. அமலீசன் சஞ்சயகுமார் அஜந்தன்
10. செல்வக்குமார் கயாலினி

# பரிசில் பெறுவோர் விபரம் (2016 ஆரம்பப்பிரிவு)

| | |
|---|---|
| **தரம் - 01** | |
| 1. கஜதீபன் சாதனா | - தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் |
| 2. அன்ரனி றதீஸ் அக்ஷா | - சுற்றாடல், தமிழ், கணிதம், சமயம் |
| 3. ஜெராட் செபானியா | - கணிதம், சமயம், தமிழ், சுற்றாடல் |
| **தரம் - 02** | |
| 1. றூமன்கிறிஸ்ரி டொறெக்ஸன் | - தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் |
| 2. இ.மதுசாளினி | - கணிதம், தமிழ், சுற்றாடல் |
| 3. கிறிஸ்ரி டினுசியா | - தமிழ், சுற்றாடல் |
| 4. விமலதாஸ் பிரிந்தா | - கணிதம், சமயம் |
| 5. விமலதாஸ் பிரிந்தா | - கணிதம், சமயம் |
| 6. ஜோக்கின் பர்ணான்டோ நிதன் | - சமயம் |
| **தரம் - 03** | |
| 1. ஜெயராஜ் பீற்றர் ஜெனிஸ்ரலா | - தமிழ், சுற்றாடல், கணிதம், சமயம், ஆங்கிலம் |
| 2. டிறோன் நிறஞ்சன் நித்தியா | - தமிழ், சுற்றாடல், கணிதம், சமயம், ஆங்கிலம் |
| 3. ஜெயக்குமார் ஜெனிஷா | - சுற்றாடல், கணிதம், சமயம், ஆங்கிலம் |
| 4. குணசீலன் அலெக்ஸ் | - தமிழ் |
| **தரம் - 04** | |
| 1. மகேந்திரன் டனுசன் | - தமிழ், கணிதம், சுற்றாடல், சைவசமயம் |
| 2. கந்தசாமி டிசானி | - சுற்றாடல், சமயம், ஆங்கிலம், கணிதம், தமிழ் |

| | | |
|---|---|---|
| 3. | ரவீந்திரகுமார் அபிஷா | - தமிழ், சமயம், ஆங்கிலம், கணிதம் |
| 4. | நியூரன் நிஸ்ஷானா | - சமயம் |
| 5. | அன்ரனி டிலக்ஷி | - சுற்றாடல் |
| 6. | ஜெகதீஸ்வரன் ஜெறினா | - ஆங்கிலம் |

## தரம் – 05

டெயஸ்ஜமன் தர்சனா -தமிழ், கணிதம், கத்தோலிக்கம், சுற்றாடல், ஆங்கிலம்

**பொதுத்திறன் – புலமைப்பரிசில் பரீட்சையில் 130க்கு கூடிய புள்ளி பெற்றமை தமிழ்தினம் வாசிப்பு கோட்டமட்டம் 1ம் இடம், வலயமட்டம் 1ம் இடம் மாகாணமட்டத்தில் பங்குபற்றியமை.**

பரலமேஸ்வரன் கிஷானா - ஆங்கிலம், சுற்றாடல், தமிழ், கணிதம், கத்தோலிக்கம்

**மொழித்திறன் – புலமைப்பரிசில் பரீட்சையில் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்றமை.**

புனிதராசா மேரிலக்சனா - கத்தோலிக்கம், சுற்றாடல், தமிழ்,

**மொழித்திறன் – புலமைப்பரிசில் பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றமை.**

**தமிழ்தின வாசிப்பு கோட்ட மட்டம் 3ம் இடம்.**

விமலதாஸ் வினுஜா – கணிதம், ஆங்கிலம்

**மொழித்திறன் புலமை பரிசில் பரீட்சையில் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்றமை.**

**புலமைப்பரிசில் பரீட்சையில் 70 புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்கள் விபரங்கள்**

மொறிசன் வினுஜா

தேவறொமின்சன் றதீசனா

சுரேஸ்குமார் சுஜிந்தன்

திவாகரன் திஷான்

ஸ்ரீ.ஜெனோஜன்

யோ.டிலோஜினி

**தரம்:- 6**

| முழுப்பெயர் | பாடம் |
|---|---|
| 1.எமிலியானஸ் சலோமி | சமயம், தமிழ், ஆங்கிலம், விஞ்ஞானம், வரலாறு, குடியியல், சுகாதாரமும் உடற்கல்வியும், நடனம், செய்முறைத் தொழில் நுட்பம் |
| 2. யோன்மேரி டினோசன் | தமிழ், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், சித்திரம் |
| 3. டிக்சன் மெவோனா | சமயம், தமிழ், ஆங்கிலம், விஞ்ஞானம், சுகாதாரமும் உடற்கல்வியும், சிங்களம் |
| 4. ஜெயக்குமார் டெனிற்றா | வரலாறு, குடியியல், சுகாதாரமும் உடற்கல்வியும், நடனம், சிங்களம் |
| 5. யூட்சின் உதயகுமார் சிறிஸ்ரிகா | சங்கீதம், புவியியல், குடியியல் |
| 6. ஸ்ரான்லி ஜெரினா | புவியியல், சுகாதாரமும், உடற் கல்வியும், சங்கீதம் |
| 7. இந்திரன் காவியா | கணிதம், சமயம், ஆங்கிலம் |
| 8. செல்வக்குமார் செந்தூரன் | சித்திரம் |
| 9. யசோக்குமார் யனிஸ்ரன் | சித்திரம் |
| 10. ஜெயக்காந்தன் ஜெதுஷா | நடனம் |
| 11. விமலதாஸ் விதுஷா | சங்கீதம் |

| தரம்:- 07 | |
|---|---|
| முழுப்பெயர் | பாடம் |
| 1.ரவிக்குமார் அபிநயா | தமிழ்,சமயம், ஆங்கிலம், விஞ்ஞானம், சிங்களம், சுகாதாரமும் உடற்கல்வியும், புவியியல், கணிதம் வரலாறு, குடியியல், செயன்முறைத் தொழில் நுட்பம், நடனம், |
| 2. இராசகுமார் மயூரன் | சமயம், ஆங்கிலம், விஞ்ஞானம், சிங்களம், சங்கீதம், சுகாதாரமும் உடற்கல்வியும், புவியியல், வரலாறு, செயன் முறைத்தொழில் நுட்பம் |
| 3. யோக்கின் பெனான்டொ யதுஷா | தமிழ், ஆங்கிலம், சிங்களம், சங்கீதம், குடியியல், கணிதம் |
| 4. லெனின்குமார் விந்தியன் | தமிழ், விஞ்ஞானம், சித்திரம், குடியியல் , சுகாதாரமும் உடற்கல்வியும், கணிதம் |
| 5. மங்களேஸ்வரன் விதுஷன் | சித்திரம், செயன்முறைத்தொழில் நுட்பம், வரலாறு, புவியியல் |
| 6. டெனால்சிலாஸ் ஜெஸ்ரின் | சித்திரம் |
| 7. நோபேட் பமில்டன் | சங்கீதம் |
| 8. அமலதாஸ் அனுதாஸ் | சங்கீதம் |
| 9. அருள்ராஜ் டிலக்சியா | நடனம் |

| தரம் 08 | |
|---|---|
| முழுப்பெயர் | பாடம் |
| 1.அன்ரன் றெமோவா | தமிழ், சமயம், ஆங்கிலம், விஞ்ஞானம், சிங்களம், சுகாதாரமும்உடற்கல்வியும், புவியியல், கணிதம் வரலாறு, குடியியல் செயன்முறைத்தொழில் நுட்பம், நடனம், |
| 2. குணசீலன் சஜீவினி | தமிழ், சமயம், விஞ்ஞானம், சிங்களம், சுகாதாரமும் உடற்கல்வியும், புவியியல், கணிதம், குடியியல், செயன்முறைத்தொழில் நுட்பம், நடனம், |
| 3. ஜெனியஸ் ஜெனா | சங்கீதம், சமயம், குடியியல் சுகா.உ, ஆங்கிலம், செ.தொ.நு.தி, வரலாறு, புவியியல், சிங்களம் |
| 4. ரங்கநாதன் ஸ்ரீஅனிதா சமயம், | சங்கீதம், தமிழ், குடியியல் |
| 5. டெயஸ்ஜமன் சுஜீவன் | வரலாறு, சித்திரம், ஆங்கிலம், கணிதம் |
| 6. ஜெராட் ஜெனார்த்தன் | சித்திரம் |
| 7. றொபேட் றெஜி | சித்திரம் |
| 8. அன்ரன் டிலக்சனா | சங்கீதம் |
| 9. உதயசிங்கராசா சுலக்சனா | நடனம் |

| தரம் 09 | |
|---|---|
| முழுப்பெயர் | பாடம் |
| 1.தவசீலராசா விவேஸ்ரிகா | சமயம், தமிழ், ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், வா.தே.கு.க, சுகா.உ, நடனம், செ.மு.தொ.நு, சிங்களம் |
| 2. சாள்ஸ் சஜீவன் | சமயம், புவியியல், வா.தே.கு.க, தமிழ், சுகா.உ, செ.தொ.நு.தி |
| 3. யோன்மேரி சுகாதரன் | விஞ்ஞானம், வராலாறு, சுகா.உ, சங்கீதம் |
| 4. ராஜ்பலீன் வெனிற்றா | நடனம், சமயம், தமிழ், புவியியல், வரலாறு, வா.தே.கு.க |
| 5. ஜெகதீஸ்வரன் ஜெனிபா | சங்கீதம், செ.தொ.நு.தி |

| தரம் 10 | |
|---|---|
| மாணவர் முழுப்பெயர் | பாடங்கள் |
| 1.ஜெஸ்தனி அலிஸ்ரன் மாட்டின் | தமிழ், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், சங்கீதம், சுகாதாரம், வரலாறு, |
| 2.வசந்தகுமார் டிலக்ஷன் | வரலாறு, புவியியல், தமிழ், விஞ்ஞானம், சங்கீதம், சுகாதாரம், சமயம் |
| 3.றொபேட்றெஸ்மன் எனோஜன் | சித்திரம், சுகாதாரம், சமயம் |
| 4.நிசாந்தன் நிராகரன் | சித்திரம் |
| 5.ரவீந்திரன் ரதீப் | சித்திரம் |
| 6.மனோகரன் ஜனார்த்தனன் | புவியியல் |
| 7.சேவியர்ரதீஸ் சுகிர்தா | நடனம் |
| 8.யஸேந்திரன் ஜெயந்தினி | சைவசமயம் |
| 9.தேவரன் பவுஸ்தீனா | நடனம் |
| 10.அபிநயா மகேந்திரன் | சைவசமயம், நடனம் |

| **தரம் 11** | |
|---|---|
| **மாணவர் முழுப்பெயர்** | **பாடங்கள்** |
| 1.மனோகரன் அபின்ஷா | சமயம், தமிழ், ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், புவியியல், நடனம், மனைப்பொருளியல், வரலாறு |
| 2.குணதாஸ் மதுமிதா | வரலாறு, புவியியல், சங்கீதம், சமயம், தமிழ், ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், மனைப்பொருளியல் |
| 3.தோமஸ்ஞானதீபன் தனுஷா | சமயம், தமிழ், புவியியல், நடனம் |
| 4.சந்திரன் பிரசாந் | சுகாதாரமும் உடற்கல்வியும், சங்கீதம் |
| 5.பத்மசீலன் யூட்டிலக்ஷன் | சித்திரம், சுகாதாரமும் உடற்கல்வியும் |
| 6.றுபேஸ்குமார் யதுஷன் | சமயம், சங்கீதம் |
| 7.யாகப்பு நிதர்சன் | சித்திரம் |
| 8.அஜந்தன் | சித்திரம் |
| 9.மொறிசன் நிதுஷா | நடனம் |
| 10.ஜெயக்குமார் கயாலினி | நடனம், விஞ்ஞானம் |
| 11.மங்களேஸ்வரன் மதுஷன் | சுகாதாரமும் உடற்கல்வியும் |

| விசேட கல்வி அலகு | |
|---|---|
| மாணவர் முழுப்பெயர் | பாடங்கள் |
| 1.சூ.டிவன்ராஜ் | தமிழ், கணிதம், வாசிப்பு, நுண்ணியக்க செயற்பாடு, சுற்றாடல், பேரியக்க செயற்பாடு, சமயம் |
| 2.நி.காரிணி | தமிழ், கணிதம், சுற்றாடல், வாசிப்பு, சமயம், நுண்ணியக்கம், பேரியக்க செயற்பாடு |
| 3.ஜெ.பிருந்திகன் | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், நுண்ணியக்க செயற்பாடு, பேரியக்க செயற்பாடு. |

| மாணவர் வரவு | | முதன்நிலை மாணவர் வரவு |
|---|---|---|
| மாணவர் பெயர் | தரம் | 1.க.சாதனா |
| 1.ஜெ.கஜீனா | 01 | 2.லூ.டொரேக்ஷன் |
| 2.வி.பிருந்தா | 02 | 3.ஜெ.ஜெனிஸ்ரலா |
| 3.டி.நித்தியா | 03 | 4.ம.டனுசன் |
| 4.ஜெ.ஜெனிஸ்ரலா | 04 | 5.டெ.தர்சனா |
| 5.பு.மேரிலக்சனா | 05 | 6.எமிலியானஸ் சலோமி |
| 6.ஜெ.சுயா | 06 | 7.ரவிக்குமார் அபிநயா |
| 7.எ.சுதிந்தன் | 07 | 8.அன்ரன் றொமோஜா |
| 8.டெ.சுஜீவன் | 08 | 9.தவசீலராசா விவேஸ்ரிகா |
| 9.த.விவேஸ்ரிகா | 09 | 10.அலிஸ்ரன் மாட்டின் ஜெஸ்தனி |
| 10.அ.ஜெல்தனி | 10 | 11.குணதாஸ் மதுமிதா |
| 11.கு.மதுமிதா | 11 | |

## இணைபாட விதான செயற்பாடு

| | | |
|---|---|---|
| **Grade** 6 | Division level | Zonel level |
| A.Salomi | 3rd in Recitation | ......................... |
| **Grade 7** | | |
| R.Abinaya | 1st in Reading<br>2nd in copy writing | 2nd in copy writing |
| **Grade 9** | | |
| Vivestica | 2nd in copy writing | 2nd in copy writing |
| **Grade 11** | | |
| Mathumitha | 3rd in copy writing | ............... |

## உதைபந்தாட்ட அணி 2016
## கோட்டமட்டம், 1ம் இடம், தகுதி வலயமட்டம் 1ம் இடம், மாகாணமட்டம்

யாகப்பர் நிதர்சன்
சந்திரன் பிரசாந்
றுபேஸ்குமார் யதுசன்
மங்களேஸ்வரன் மதுசன்
பத்மசீலன் யூட்டிலக்சன்
அமலீசன் சஞ்சைக்குமார் அஜந்தன்
வினோத்குமார் கவி
றொபேட்டெஸ்மன் எனோஜன்
சந்திரன் பிரதீசன்
மனோகரன் யனார்த்தன்
பரமேஸ்வரன் கிஷான்
இரங்கநாதன் சிறிகரன்
நிராகரன் நிசாந்தன்

## மெய்வல்லுனர் நிகழ்வுகள்

| | | | |
|---|---|---|---|
| றொ.சுஜி | 100m | வலயமட்டம் | 1ம் இடம் |
| யா.நிதர்சன் | 200m, 400m | கோட்டம் | 2ம் இடம் |
| ப.யூட்டிலக்சன் | உயரம்பாய்தல் | கோட்டம் | 2ம் இடம் |

## மாகாணமட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டோர்

1. டெ.தர்சனா — வாசிப்பு
2. அ.றெமோவா — சமூகவிஞ்ஞானப்போட்டி

## இணைபாடவிதானச் செயற்பாடு – விசேடகல்வி

காரிணி – வலயமட்டம் - சித்திரப்போட்டி, விளையாட்டுப்போட்டி
மாகாணமட்டம் - விளையாட்டுப்போட்டி

சூ.டிவன்ராஜ் - வலயமட்டம் , மாகாணமட்டம்
சித்திரப்போட்டி, விளையாட்டுப்போட்டி

ஜெ. பிருத்திகன் - வலயமட்டம், மாகாணமட்டம்
சித்திரப்போட்டி, விளையாட்டுப்போட்டி

கா.கனிஸ்ரா - வலயமட்டம், மாகாணமட்டம்
சித்திரப்போட்டி, விளையாட்டுப்போட்டி

## இணைபாடவிதானச் செயற்பாடு – 2016

| தரம் | மாணவர்பெயர் | விடயம் | அடைவு |
|---|---|---|---|
| 05 | தர்ஷனா | வாசிப்பு | கோட்டம் - 1ம் இடம்<br>வலயம் - 1ம் இடம் |
| 05 | மேரிலக்ஷனா | வாசிப்பு | கோட்டம் - 3ம் இடம் |

## பண்ணிசைப்போட்டி

| | | | |
|---|---|---|---|
| 06 | மெவோனா | தனிஇசை | கோட்டம் 1ம் இடம் |
| 6,7 | | குழு இசை | கோட்டம் 2ம் இடம் |

## வித்தியாலயத்தின் சிறந்த மாணவி

குணதாஸ் மதுமிதா

## வித்தியாலயத்தின் சிறந்த ஆசிரியர்

திருமதி பாலகிருஷ்ணன் சியாமளா

## வரவு ஒழுங்கு ஆசிரியர்

திருமதி.கி.சந்திரகுமார்

# தமிழ்த்தாய் வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழிய வே!
வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழிய வே!

ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழிய வே!
எங்கள் தமிழ்மொழி! எங்கள் தமிழ்மொழி!
என்றென்றும் வாழிய வே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையக மே!
தொல்லை வினை தரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ் நாடே!

வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ்மொழி!
வாழ்க தமிழ்மொழி யே!
வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழிய வே!

ஸ்ரீ மாருதி பதிப்பகம் 0777917680